ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2261/57 - 2022 ජනවාරි මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.01.06
2261/57 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 3/2013* (ii)

**1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம்**

*1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் சொல்லப்பட்ட சட்டத்தின் 321 ஆம் பிரிவின்கீழ் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

ரோஹித அபேகுணவர்தன,
துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில்
அமைச்சர்.

கொழும்பு,
2021, திசெம்பர் 29.

**ஒழுங்குவிதிகள்**

1. (1) இவ்வொழுங்கு விதிகள் 2021 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (கப்பல்களின் காப்பான தொழிற்பாட்டுக்கான முகாமை) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கமானது, 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேசச் சமவாயத்தின் அத்தியாயம் IX காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் வரைவாவணம், அத்தகைய வரைவாவணத்துக்குச் செய்யப்பட்ட அடுத்துப்பின்னரான ஏதேனும் திருத்தம் மற்றும் (இதனகத்துப்பின்னர் “சர்வதேசக் காப்பு முகாமைச் சட்டக்கோவை” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சர்வதேசத் காப்பு முகாமைச் சட்டக்கோவை என்பனவற்றுக்குப் பயன்கொடுப்பதாதல் வேண்டும்.

### பாகம் I

### இவ்வொழுங்குவிதிகளின் ஏற்புடையதாந்தன்மை

2. (1) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (2) இன் ஏற்பாடுகளுக்கமைய, இவ்வொழுங்குவிதிகள், பந்திகள் (அ), (ஆ) மற்றும் (இ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்டவையும் இலங்கைக் கொடியைப் பறக்கவிடுவதற்கு உரித்துடையவையும் சர்வதேசக் கடற்பயணங்களில் ஈடுபட்டுள்ளவையுமான கப்பல்களின் வகுதிகளுக்கும் மற்றும் வேறெவையேனும் வெளிநாட்டுக் கப்பல்கள் இலங்கை நீர்ப்பரப்புகளில் இருக்கையில் அவற்றுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்: -

(அ) ஏதேனும் அளவினவான அதிவேகப் பயணிக் கலன்களுட்பட, பயணிக் கப்பல்களுக்கும்;

(ஆ) 500 முழுமொத்தத் தொன்னளவை அல்லது அதற்கு மேற்பட்டதைக் கொண்ட எண்ணெய்த் தாங்கற் கலன்களுக்கும், இரசாயனப்பொருள் கலன்களுக்கும், வாயும் கப்பலல்களுக்கும், தொகையாக ஏற்றிச்செல்லும் கப்பல்களுக்கும், மற்றும் அதிவேகச் சரக்குக் கலன்களுக்கும்; அத்துடன்

(இ) 500 முழுமொத்தத் தொன்னளவை அல்லது அதற்கு மேற்பட்டதைக் கொண்ட வேறு சரக்குக் கப்பல்களுக்கும் மற்றும் நடமாடும் கரைகடந்த துளையிடுதற் கூறுகளுக்கும்.

(2) (இவ்வொழுங்குவிதிகளில் “சமவாயம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1974 ஆம் ஆண்டின் கடலில் உயிர்காப்புக்கான சர்வதேசச் சமவாயம் மற்றும் 1988 ஆம் ஆண்டின் வரைவாவணம் என்பவற்றில் வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடுசெய்யப்பட்டவாறுதவிர, இவ்வொழுங்குவிதிகள் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனவாதலாகாது:-

(அ) போர்க்கப்பல்களுக்கும் படைக்குழுவினர் கப்பல்களுக்கும்;

(ஆ) பொறிமுறை வழிவகைகள் மூலம் உந்தப்படாத கப்பல்களுக்கும்;

(இ) தொன்மையான கட்டமைப்பைக்கொண்ட மரக்கப்பல்களுக்கும்;

(ஈ) வியாபாரத்தில் ஈடுபட்டிராத பொழுதுபோக்கு உலாப்படகுகளுக்கும்;

(உ) மீன்பிடிக் கலன்களுக்கும்; அத்துடன்;

(ஊ) வர்த்தகஞ்சாரா நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டவையும் அரசாங்கத்தினால் தொழிற்படுத்தப் பட்டவையுமான கப்பல்களுக்கும்.

3. (1) வழமையாகச் சர்வதேசக் கடற்பயணங்களில் ஈடுபடாததும் ஆனால் விதிவிலக்கான சூழ்நிலைகளில் தனியொரு சர்வதேசக் கடற்பயணத்தைப் பொறுப்பேற்பதற்குத் தேவைப்படுத்தப்படுவதுமான கப்பலொன்று, (இவ்வொழுங்குவிதிகளில் “பணிப்பாளர் தலைமையதிபதி” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் இவ்வொழுங்குவிதிகளின் தேவைப்பாடுகளுள் எவற்றிலிருந்தும் விலக்களிக்கப்படலாம்:

ஆயின், கப்பலினால் பொறுப்பேற்கப்படவுள்ள கடற்பயணத்துக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில் போதியனவாகவுள்ள காப்புத் தேவைப்பாடுகளுக்கு அத்தகைய கப்பல் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்பு 2022 ஆம் ஆண்டு 01 மாதம் 16 ஆந்திகதிய 2261/49 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வணிகக் கப்பற்றொழில் (ஆய்வுகளும் சான்றிதழ்களும்) ஒழுங்குவிதிகளுக்கிணங்க வழங்கப்படுதல் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி நியாயமான அறிவித்தல் கொடுப்பதன்மீது, இவ்வொழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் விலக்களிப்பை மாற்றலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

## பாகம் II

## காப்பு முகாமைத் தேவைப்பாடுகள்

4. (1) கம்பெனியும் கப்பலும் சர்வதேசக் காப்பு முகாமைச் சட்டக்கோவையின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும். இவ்வொழுங்குவிதியின் நோக்கத்துக்காக, சர்வதேசக் காப்பு முகாமைச் சட்டக்கோவையின் தேவைப்பாடுகள் கட்டாயமானவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாகின்ற கப்பலொன்று, முறையே 5 ஆம், 6 ஆம் ஒழுங்குவிதிகளின்கீழ் அதற்கு வழங்கப்பட்ட செல்லுபடியான இணங்கியொழுகுகை ஆவணத்தை அல்லது செல்லுபடியான இடைக்கால இணங்கியொழுகுகை ஆவணத்தை வைத்திருக்கிறவொரு கம்பெனியினால் தொழிற்படுத்தப்படுதல் வேண்டும்.

5. (1) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது (இதனகத்துப்பின்னர் "ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பணிப்பாளர் தலைமையதிபதியினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பொன்று, சர்வதேசக் காப்பு முகாமைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்ற ஒவ்வொரு கம்பெனிக்கும் இணங்கியொழுகுகை ஆவணமொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) இணங்கியொழுகுகை ஆவணத்தின் பிரதியொன்று கப்பலில் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் கோரிக்கையின்மீது கப்பற்றலைவரினால் காண்பிக்கப்படுதலும் வேண்டும். ஆவணத்தின் பிரதி மெய்யென்று உறுதிப்படுத்தப்படு வதற்கு அல்லது சான்றுப்படுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது.

(3) பணிப்பாளர் தலைமையதிகதி அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பொன்று, இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாகின்ற ஒவ்வோர் இலங்கைக் கப்பலுக்கும் காப்பு முகாமைச் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும். காப்பு முகாமைச் சான்றிதழை வழங்குமுன்னர் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பொன்று, கம்பெனியும் அதன் கப்பலிலான முகாமைத்துவமும் சர்வதேசக் காப்பு முகாமைச் சட்டக்கோவையில் விதித்துரைக்கப்பட்டவாறு தொழிற்படுகின்றனவென்பதனைச் சரிபார்த்தல் வேண்டும்.

(4) பத்தாம் ஒழுங்குவிதிக்கமைய, ஓர் இணங்கியொழுகுகை ஆவணமும் ஒரு காப்பு முகாமைச் சான்றிதழும் வழங்குகைத் திகதியிலிருந்து ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்குச் செல்லுபடியுடையனவாதல் வேண்டும்.

6. (1) கம்பெனியொன்று புதிதாகத் தாபிக்கப்பட்டுள்ளது அல்லது சரிபார்த்தலைத் தொடர்ந்து ஏலவேயுள்ள ஓர் இணங்கியொழுகுகை ஆவணத்துக்குப் புதிய வகையினவான கப்பல்கள் சேர்க்கப்படவுள்ளனவெனத் திருப்திப்படுவதன்மேல் சர்வதேசக் காப்பு முகாமைச் சட்டக்கோவையின் தொடக்க நடைமுறைப்படுத்துகையை வசதிப்படுத்துவதற்குப் பணிப்பாளர் தலைமைதிபதியால் அல்லது ஓர் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பினால் இடைக்கல இணங்கியொழுகுகை ஆவணமொன்று வழங்கப்படலாம்; ஆயின், இடைக்கால இணங்கியொழுகுகை ஆவணத்தின் செல்லுபடிக் காலப்பகுதியினுள் சர்வதேசக் காப்பு

முகாமைச் சட்டக்கோவையின் முழுத்தேவைப்பாடுகளையும் எதிர்கொள்கின்ற காப்பு முகாமைத்துவ முறைமையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்களைக் கம்பெனி எடுத்துக்காட்டுதல் வேண்டும்.

(2) பத்தாம் ஒழுங்குவிதிக்கமைய, இடைக்கால இணங்கியொழுகுகை ஆவணமொன்று பன்னிரெண்டு மாதங்களுக்குச் செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

(3) இடைக்கால இணங்கியொழுகுகை ஆவணத்தின் பிரதியொன்று கப்பலில் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் கோரிக்கையின் மீது கப்பற்றலைவரினால் காண்பிக்கப்படுதலும் வேண்டும். ஆவணத்தின் பிரதி மெய்யென்று உறுதிப்படுத்தப்படுவதற்கு அல்லது சான்றுப்படுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது.

(4) இடைக்காலக் காப்பு முகாமைச் சான்றிதழொன்று பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது ஓர் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பினால் பின்வருமாறு வழங்கப்படலாம்;

(அ) ஒப்படைப்பின்மீது அல்லது பாரிய மாற்றங்களின்மீது புதிய கப்பல்களுக்கு;

(ஆ) எந்தக் கப்பல்களின் முகாமைக்கான பொறுப்புடைமை கம்பெனியினால் புதிதாகப் பொறுப்பேற்கப் பட்டுள்ளதோ அக்கப்பல்களுக்கு; அல்லது

(இ) சட்டத்தின்கீழ் முதலாவது பதிவகத்துக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட கப்பல்களுக்கு.

(5) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (4) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட இடைக்காலக் காப்பு முகாமைச் சான்றிதழ், சரிபார்த்தலைத் தொடர்ந்து பின்வருமாறு வழங்கப்படுதல் வேண்டும்:-

(அ) இணங்கியொழுகுகை ஆவணம் அல்லது இடைக்கால இணங்கியொழுகுகை ஆவணம் சம்பந்தப்பட்ட கப்பலுக்கு இயைபானதென்றும்;

(ஆ) சம்பந்தப்பட்ட கப்பலுக்காகக் கம்பெனியினால் வழங்கப்பட்ட காப்பு முகாமைத்துவ முறைமை, சர்வதேசக் காப்பு முகாமைச் சட்டக்கோவையின் முக்கிய அம்சங்களை உள்ளடக்குகின்றதென்றும் இணங்கியொழுகுகை ஆவணத்தின் வழங்குகைக்காகக் கணக்காய்வின் போது மதிப்பீடுசெய்யப்பட்டுள்ளதென்றும் அல்லது இடைக்கால இணங்கியொழுகுகை ஆவணத்தின் வழங்குகைக்காக எடுத்துக்காட்டப்பட்டுள்ளதென்றும்;

(இ) கம்பெனியானது கப்பலின் உள்ளகக் கணக்காய்வை மூன்றுமாதங்களினுள் திட்டமிட்டுள்ளதென்றும்;

(ஈ) கப்பற்றலைவரும் அலுவலர்களும் காப்பு முகாமைத்துவ முறைமையுடனும் அதனை நடைமுறைப் படுத்துவதற்காகத் திட்டமிடப்பட்ட ஒழுங்கேற்பாடுகளுடனும் பரிச்சயமாகவுள்ளனரென்றும்;

(உ) அத்தியாவசியமானவையாக அடையாளங்காணப்பட்ட அறிவுறுத்தல்கள் கடலிற்குச் செல்லுமுன்னர் வழங்கப்படுகின்றனவென்றும்; அத்துடன்

(ஊ) காப்பு முகாமைத்துவ முறைமை மீதான இயைபான தகவல் ஆங்கில மொழியில் கொடுக்கப்பட்டுள்ள தென்றும்.

(6) பத்தாம் ஒழுங்குவிதிக்கமைய, இடைக்காலக் காப்பு முகாமைச் சான்றிதழொன்று ஆறு மாதங்களுக்குச் செல்லுபடியுடையதாதல் வேண்டும். விசேட சூழ்நிலைகளில், பணிப்பாளர் தலைமைதிபதி அல்லது பணிப்பாளர் தலைமைதிபதியின் அனுமதியுடன் ஓர் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பு, நியாயப்படுத்தத்தக்க காரணங்களைச் சமர்ப்பிப்பதன்மேல் மேற்கொண்டு ஆறுமாதங்களுக்காக அத்தகைய சான்றிதழின் செல்லுபடியாந்தன்மையை நீடிக்கலாம்.

(7) ஐந்தாம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட இணங்கியொழுகுகை ஆவணமும் காப்பு முகாமைச் சான்றிதழும், 6 ஆம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட இடைக்கால இணங்கியொழுகுகை ஆவணமும் இடைக்காலக் காப்பு முகாமைச் சான்றிதழும் சர்வதேசக் காப்பு முகாமைச் சட்டக்கோவையில் கொடுக்கப்பட்ட மாதிரிகளுக்கு நேரொத்த படிவத்தில் வரையப்படுதல் வேண்டுமென்பதுடன் அவை, தொழிற்பாட்டு மொழியிலும் ஆங்கில மொழியிலும் கப்பலில் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

7. ஒரு வெளிநாட்டுக் கப்பலின் விடயத்தில், 5 ஆம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட இணங்கியொழுகுகை ஆவணமும் காப்பு முகாமைச் சான்றிதழும், 6 ஆம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட இடைக்கால இணங்கியொழுகுகை ஆவணமும் இடைக்காலக் காப்பு முகாமைச் சான்றிதழும், கப்பலானது எந்த அரசின் கொடியைப் பறக்கலிடுகின்றதோ அந்த அரசினால் அல்லது அதன்சார்பில் செயலாற்றுகின்ற ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பினால் வழங்கப்படுதல் வேண்டும்.

8. ஐந்தாம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட இணங்கியொழுகுகை ஆவணம் மற்றும் காப்பு முகாமைச் சான்றிதழ் தொடர்பில் சர்வதேசக் காப்பு முகாமைச் சட்டகோவையினால் தேவைப்படுத்தப்பட்ட எல்லாச் சரிபார்த்தல்களும், ஒழுங்கமைப்பினால் அபிவிருத்தி செய்யப்பட்ட வழிகாட்டு நெறிகளைக் கணக்குக்கெடுத்து சர்வதேசக் காப்பு முகாமைச் சட்டக்கோவையினால் தேவைப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் நிறைவேற்றப்படுதல் வேண்டும். அத்தகைய சரிபார்த்தல்கள், காப்பு முகாமைத்துவ முறைமையின் கணக்காய்வொன்றை உள்ளடக்கும்.

9. (1) இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாகின்ற ஏதேனும் கம்பெனியை அல்லது கப்பலைப் பணிப்பாளர் தலைமையதிபதி சோதனையிடலாம்.

(2) (அ) ஒரு பயணி அல்லது கப்பற்றொகுதியுறுப்பினர் முறைப்பாடு செய்கின்ற; அல்லது

(ஆ) (i) ஓர் ஆய்விலிருந்து அல்லது பொதுச் சோதனையிலிருந்து முடிவெடுப்புகள் உள்ள; அல்லது

(ii) விபத்துக்கள் அல்லது பாரதூரமான எந்திரத்தொகுதி முறிவுகள், காப்பு முகாமைத்துவ முறைமையில் நிகழ்தகு குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுகின்ற,

அத்தகைய விடயங்களில், கப்பலின் அல்லது கம்பெனியின் பின்தொடர் மேலதிகச் சரிபார்த்தல் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது ஓர் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒழுங்கமைப்பினால் நடாத்தப்படலாம்.

10. (1) உபஒழுங்குவிதி (2) இல் நிரற்படுத்தப்பட்ட சூழ்நிலைகளுள் ஏதேனுமொன்றில், பணிப்பாளர் தலைமைதிபதி, எழுத்திலான அறிவிததல்மூலம், சர்வதேசக் காப்பு முகாமைச் கட்டக்கோவையின்கீழ் வழங்கப்பட்ட இயைபான ஏதேனும் ஆவணத்தை, அதற்கான காரணங்களைக் குறித்தளித்து இடைநிறுத்தலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

(2) உபஒழுங்குவிதி (1) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட சூழ்நிலைகள் பின்வருவனவாகும்:-

(அ) ஆவணமானது பிழையான தகவலின் அடிப்படையின்மீது வழங்கப்பட்டது;

(ஆ) ஆவணம் தொடர்பில் சர்வதேசக் காப்பு முகாமைச் சட்டக்கோவையின் பாகம் ஆ வினால் தேவைப்படுத்தப்பட்ட கணக்காய்வொன்று, சர்வதேசக் காப்பு முகாமைச் சட்டக்கோவையினால் தேவைப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் இடம்பெறவில்லை;

(இ) கம்பெனியின் அல்லது கப்பலின் முகாமைத்துவக் கட்டமைப்பு, மிக்க அண்மையிலான கணக்காய்வின் பின்னர் மாறியுள்ளது; அல்லது

(ஈ) கணக்காய்வின்மேல் கப்பல் அல்லது கம்பெனி, சர்வதேசக் காப்பு முகாமைச் சட்டக்கோவைக்குத் தொடர்ந்து இணங்கியொழுக வில்லையெனக் காணப்படுகின்றது.

(3) எவையேனும் இணைந்த காப்பு முகாமைச் சான்றிதழ்கள் அல்லது இடைக்காலக் காப்பு முகாமைச் சான்றிதழ்கள், இணங்கியொழுகுகை ஆவணமொன்று தொடர்பில் உபஒழுங்குவிதி (1) இன்கீழ் அறிவித்தலொன்று கொடுக்கப்படின், செல்லுபடியற்றனவாக வருதல் வேண்டும்.

(4) பந்தி (1) இன் கீழான அறிவித்தலொன்று பின்வரும் சந்தர்ப்பங்களில் மட்டுமே செல்லுபடியாகும்:-

(அ) இணைபான ஆவணத்தை வைத்திருப்பவருக்கு, அறிவித்தல் கொடுக்கப்படுமுன்னர் முறையீடுகளைச் செய்வதற்கான வாய்ப்பு கொடுக்கப்பட்டிருந்தால்; அல்லது

(ஆ) அவசரமான காப்பு அல்லது தீழ்ப்புத்தடுப்பு அக்கறைகள் அவ்வறிவித்தல் உடனடியாகக் கொடுக்கப்படுவதனைத் தேவைப்படுத்துன்றனவெனப் பணிப்பாளர் தலைமையதிபதி கருதினால்.

11. (1) (அ) பணிப்பாளர் தலைமையதிபதி, சமவாயம் ஏற்புடையதாகின்ற அரசொன்றின் அரசாங்கத்தினது கோரிக்கையின் பேரில், அந்த நாட்டில் பதிவுசெய்யப்பட்ட கப்பலொன்றின் காப்பு முகாமைத்துவ முறைமையையும் கம்பெனியையும் கணக்காய்வு செய்யலாம்.

(ஆ) அத்தகையவொரு கோரிக்கைக்குப் பதிலிறுக்கின்ற கணக்காய்வொன்றை நிறைவேற்றியபின்னர், சர்வதேசக் காப்பு முகாமைச் சட்டக்கோவையின் தேவைப்பாடுகள் எதிர்கொள்ளப்படுகின்றனவெனப் பணிப்பாளர் தலைமைதிபதி திருப்திப்படுமிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, ஓர் இணங்கியொழுகுகை ஆவணத்தை அல்லது ஒரு காப்பு முகாமைச் சான்றிதழைக் கம்பெனிக்கு வழங்கலாம், அல்லது தோதானவிடத்து, சர்வதேசக் காப்பு முகாமைச் சட்டக்கோவையில் குறித்துரைக்கப்பட்டவாறான ஏற்புடையற்பாலனவான சரிபார்த்தல்களுக்குப் பின்னர் சமவாயத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க அத்தகையவோர் ஆவணத்தைப் புறக்குறிப்பிடலாம். அவ்வாறு வழங்கப்பட்ட அல்லது புறக்குறிப்பிடப்பட்ட ஏதேனும் சான்றிதழ், கப்பலானது எந்த அரசின் கொடியைப் பறக்கவிடுகின்றதோ அந்த அரசின் அரசாங்கங்களின் கோரிக்கையின் பேரில் அது வழங்கப்பட்டுள்ளதென்ற பொருள்பட்ட கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அக்கோரிக்கையை விடுத்த அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட ஒரு சான்றிதழ் என்றாற்போன்று அதே வலுவைக் கொண்டிருத்தலும் அதே ஏற்றங்கீகாரத்தைப் பெறுதலும் வேண்டும்.

(2) (அ) பணிப்பாளர் தலைமையதிபதி, சமவாயம் ஏற்புடையதாகின்ற அரசொன்றின் அரசாங்கத்தை, இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கப்பலொன்றின் காப்பு முகாமைத்துவ முறைமையையும் கம்பெனியையும் கணக்காய்வு செய்யும் படி கோரளாம்.

(ஆ) அத்தகைய அரசு அத்தகைய கோரிக்கைக்குப் பதிலலித்துகணக்காய்வொன்றை நிறைவேற்றுகின்றவிடத்தும் சர்வதேசக் காப்பு முகாமைச் சட்டக்கோவையின் தேவைப்பாடுகள் எதிர்கொள்ளப்படுகின்றனவெனத் திருப்திப்படுகின்றவிடத்தும், ஓர் இணங்கியொழுகுகை ஆவணத்தை அல்லது காப்பு முகாமைச் சான்றிதழைப் பணிப்பாளர் தலைமையதிபதி கம்பெனிக்கு வழங்கலாம், அல்லது தோதானவிடத்து, சர்வதேசக் காப்பு முகாமைச் சட்டக்கோவையில் குறித்துரைக்கப்பட்டவாறாக ஏற்புடையற்பாலனவான சரிபார்த்தல்களின் பின்னர் சமவாயத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்க அத்தகையவோர் ஆவணத்தைப் புறக்குறிப்பிடலாம். அவ்வாறு வழங்கப்பட்ட அல்லது புறக்குறிப்பிடப்பட்ட ஏதேனும் சான்றிதழ் இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையின் பேரில் அது வழங்கப்பட்டுள்ளதென்ற பொருள்பட்ட கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன் அது, பணிப்பாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்டவொரு சான்றிதழ் என்றாற்போன்று அதே வலுவைக் கொண்டிருத்தலும் அதே ஏற்றங்கீகாரத்தைப் பெறுதலும் வேண்டும்.

12. (1) ஒவ்வொரு கம்பெனியும், ஒவ்வொரு கப்பலினதும் காப்பான தொழிற்பாட்டை உறுப்படுத்துவதற்கும் கம்பெனிக்கும் கம்பெனியின் கப்பல்களில் உள்ளவர்களுக்குமிடையே இணைப்பை ஏற்படுத்துவதற்கும் முகாமைத்துவத்தின் அதியுச்ச மட்டத்துக்கு நேரடி அணுக்கத்தையுடைய கரையிலுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களைப் பெயர்குறித்தல் வேண்டும்.

(2) பெயர்குறிக்கப்பட்ட ஆளின் பொறுப்புடைமையும் அதிகாரமும் சர்வதேசக் காப்பு முகாமைச் சட்டக்கோவைக்கிணங்கவிருத்தல் வேண்டும்.

(3) இவ்வொழுங்குவிதியின் உபஒழுங்குவிதி (1) இனைப் பின்பற்றி சர்வதேசக் காப்பு முகாமைச் (சகாமு) சட்டக்கோவையின் ஏற்பாடுகளின்கீழ் பெயர்குறிக்கப்பட்ட ஆளின் வகிபங்கைப் பொறுப்பேற்கின்ற ஆளொருவர், ஒழுங்கமைப்பினால் அபிவிருத்திசெய்யப்பட்ட வழிகாட்டுநெறிகளில் விதித்துரைக்கப்பட்டவாறாக அவசியமான தகைமைகளையும், பயிற்சிகளையும், அனுபவத்தையும் உடையவராகவிருத்தல் வேண்டும்.

(4) உபஒழுங்குவிதி (1) றைப் பின்பற்றி அத்தகைய ஆட்களைப் பெயர்குறிக்கின்ற ஒவ்வொரு கம்பெனியும் பெயர்குறித்தலுக்குப்பின்னர் உடனடியாக அவர்களின் தகைமை, பயிற்சி மற்றும் அனுபவம் என்பவற்றுடன் சேர்த்து அவர்களின் பெயர்குறித்தல்பற்றிப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

13. காப்பு முகாமைத்துவ முறைமை, சர்வதேசக் காப்பு முகாமைச் சட்டக்கேவையின் ஏற்பாடுகளுக்கிணங்கப் பேணப்படுதல் வேண்டும்.

14. ஒழுங்குவிதி 5 (3) றின் ஏற்பாடுகளைப் பின்பற்றி வழங்கப்பட்ட சான்றிதழொன்றை வைத்திருப்பதற்குத் தேவைப் படுத்தப்பட்ட கப்பலொன்று சமவாயத்தின் அத்தியாயம் I இன் 4 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கட்டுப்பாட்டுக்கு அமைந்ததாக்கப்படுதல் வேண்டும். இந்நோக்கத்துக்காக, அத்தகைய சான்றிதழ், சமவாயத்தின் அத்தியாயம் I இன் ஒழுங்குவிதி 12 அல்லது 13 இன்கீழ் வழங்கப்பட்ட சான்றிதழொன்றாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

## பாகம் III

## பொது ஏற்பாடுகள்

15. இலங்கையில் ஏதேனும் துறைமுகத்தில் அல்லது இடத்தில் இருக்கின்ற ஏதேனும் கப்பல், அத்தகைய கப்பலின் உடற்கோப்பு, சாதனங்கள், எந்திரத்தொகுதி, குறைவான ஆளமர்த்துகை, மிகைச்சுமையேற்றல் அல்லது முறையற்ற சுமையேற்றல் அல்லது சமவாயத்துக்கு ஒத்ததாகவிராத வேறேதேனும் நிப்ந்தனை காரணைமாகக் காப்பற்ற கப்பலொன்றாகக் காணப்பட்டு, அத்தகைய கப்பல் எந்தச் சேவைக்காக உட்கருதப்படுகின்றதோ அந்தச் சேவையின் தன்மையைக் கருத்திற்கொண்டு மனித உயிருக்குப் பாரிய சேதம்விளைவிக்காமல் கடலுக்குச் செல்வதற்குத் தகுதியற்றதாகவிருக்குமிடத்து, அத்தகைய கப்பல் ஆய்வுசெய்யப்படும் அல்லது குறைபாடுள்ள நிலைமையை நிவர்த்திசெய்யும் நோக்கத்துக்காகத் தற்காலிகமாகத் தடுத்துவைக்கப்படலாம்.

16. சமவாயத்தின் அத்தியாயம் IX இலுள்ள அடிக்குறிப்புகளும் அத்தகைய அடிக்குறிப்புகளினால் குறிப்பீடுசெய்யப்பட்ட தீர்மானங்களும், சுற்றறிக்கைகளும் அல்லது ஆவணங்களும் இவ்வெழுங்குவிதிகளின் பாகமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

17. பணிப்பாளர் தலைமையதிபதி, அமைச்சரின் ஒருப்பாட்டுடன், இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காகத் தேவைப்படக்கூடியவாறாகச் சமவாயத்தின் அல்லது 1988 ஆம் ஆண்டின் வரைவாவணத்தின் ஏற்பாடுகளினது குறைந்தபட்சத் தொழிநுட்ப நியமங்களுக்கு இணங்கியொழுகுவதற்கான அத்தகைய நடைமுறைப்படுத்தல் நியமங்களை வழங்கலாம்.

18. இவ்வொழுங்குவிதிகளில் -

"சட்டம்" என்பது, 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம் என்று பொருளாகும்;

"கணக்காய்வு" என்பது, காப்பு முகாமைத்துவ முறைமையானது திட்டமிடப்பட்ட ஒழுங்கேற்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்றதாவென்பதையும் அத்தகைய ஒழுங்கேற்பாடுகள் பயனுற நடைமுறைப் படுத்தப்படுகின்றனவாவென்பதையும் விரும்பிய குறிக்கோள்களை எய்துவதற்குப் போதியனவாகவுள்ளனவாவென்பதையும் தீர்மானிப்பதற்கு முறைமைசார் மற்றும் சுயேச்சையான பரிசோதனையொன்று எனப் பொருளாகும்;

“தொகையாக ஏற்றிச்செல்லும் கப்பல்” என்பது, பொதுவாகத் தனிமேற்றளத்துடனும் மேற்பக்கத் தாங்கிகளுடனும் சரக்கு இடங்களில் துள்ளுகின்ற பக்கத் தாங்கிகளுடனும் நிர்மாணிக்கப்பட்டதும் தொகையாக உலர் சரக்கை ஏற்றிச்செல்வதற்குப் பிரதானமாகக் கருதப்பட்டதுமானவொரு கப்பல் என்று பொருளாகுமென்பதுடன் தாதுக் கப்பல்களாவும் இணைந்த கப்பல்களாகவும் உள்ள அத்தகைய வகைகளையும் உள்ளடக்கும்;

‘இரசாயனப்பொருள் தாங்கற்கலன்” என்பது, சர்வதேசத் தொகையான இரசாயனப்பொருள் சட்டக்கோவையின் அத்தியாயம் 17 இல் நிரற்படுத்தப்பட்ட ஏதேனும் திரவத் தயாரிப்பைத் தொகைரயாக ஏற்றிச்செல்வதற்கு நிர்மாணிக்கப்பட்ட அல்லது இசைவாக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்டவொரு சரக்குக் கப்பல் என்று பொருளாகும்;

“கம்பெனி” என்பது, கப்பலின் தொழிற்பாட்டுக்கான பொறுப்புடைமையைக் கப்பற் சொந்தக்காரரிடமிருந்து ஏற்றுள்ளவரும் அத்தகைய பொறுப்புடைமையை ஏற்றுக்கொண்டதன்மேல் சர்வதேசக் காப்பு முகாமைச் சட்டக்கோவையினால் சுமத்தப்பட்ட எல்லாக் கடமைகளையும் பொறுப்புடைமைகளையும் கையேற்பதற்கு உடன்பட்டுள்ளவருமான கப்பற்சொந்தக்காரர் அல்லது வேறேதேனும் ஒழுங்கமைப்பு அல்லது முகாமையாளர், அல்லது வேற்றுப்படகு வாடகைக்கமர்த்துநர் போன்ற ஆள் என்று பொருளாகும்;

“வாயுக் கப்பல்” என்பது, சர்வதேச வாயுக் கப்பல் கட்டக்கோவையின் அத்தியாயம் 19 இல் நிரற்படுத்தப்பட்ட ஏதேனும் திரவமாக்கப்பட்ட வாயுவை அல்லது வேறு தயாரிப்பைத் தொகையாக ஏற்றிச்செல்வதற்கு நிர்மாணிக்கப்பட்ட அல்லது இசைவாக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்டவொரு சரக்குக் கப்பல் என்று பொருளாகும்;

“அதிவேகக் கலன்’ என்பது, பின்வருவதற்குச் சமமான அல்லது அதனை விஞ்சுகின்ற, ஒரு நொடிக்கான மீற்றர்களில் (m/s) அதிகபட்ச வேகத்தில் செல்லக்கூடியவொரு கலன் என்று பொருளாகும்;

$3.7\ \nabla^{0.1667}$

இங்கு : ∇= எந்தக் கலத்தின் உடற்கோப்பு, பெயர்ச்சியல்லா முறையில் நீரின் மேற்பரப்புக்குமேல் நிலத்தள விளைவினால் தோற்றுவிக்கப்பட்ட காற்றுவிசையியக்க விசைகளின்மூலம் முழுமையாக ஆதாரப்படுத்தப்படுகின்றதோ அந்தக் கலன் நீங்கலாக வடிவமைப்பு நீர்வரைக்கு நேரொத்த பெயர்ச்சி அளவாகும் ($m^3$);

“சர்வதேசக் காப்பு முகாமை (சகாமு) சட்டக்கோவை” என்பது, ஒழுங்கமைப்பினால் திருத்தப்படக்கூடியவாறாக, தீர்மானம் A.741(18) இன்மூலம் ஒழுங்கமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கப்பல்களின் காப்பான தொழிற்பாட்டுக்கும் தீழப்புத்தடுப்புக்குமான சர்வதேச முகாமைச் சட்டக்கோவை என்று பொருளாகும்;

“நாடமாடும் கரைகடந்த துளையிடுதற் கூறு” என்பது, திரவ அல்லது வாயுசார் ஹைதரோகார்பன்கள், கந்தகம் அல்லது உப்புப்போன்ற கடற்படுக்கைக்கடியிலுள்ள வளங்களைத் தேடிக்கண்டுபிடித்தல் அல்லது பயன்படுத்துதலுக்காகத் துளையிடுதல் தொழிற்பாடுகளில் ஈடுபடுவதற்கு ஆற்றலுடையவொரு கலன் என்று பொருளாகும்;

“எண்ணெய்த் தாங்கற்கலன்” என்பது, 1973 ஆம் ஆண்டின் கப்பலிலிருந்து தீழ்ப்பைத் தடுப்பதற்கான சர்வதேசச் சமவாயத்துக்கான 1978 ஆம் ஆண்டின் வரைவாவணத்தினது பின்னிணைப்பு I இன் 1 ஆம் ஒழுங்குவிதியில் வரைவிலக்கணங் கூறப்பட்ட எண்ணெய்த் தாங்கற்கலன் என்று பொருளாகும் ;

“ஒழுங்கமைப்பு” என்பது, சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்பு என்று பொருளாகும்;

"காப்பு முகாமைத்துவ முறைமை" என்பது கம்பெனியின் காம்பு மற்றும் சூழற் பாதுகாப்புக் கொள்கையைப் பயனுற நடைமுறைப்படுத்துவதற்குக் கம்பனி ஆளணியினரை இயலச் செய்கின்ற கட்டமைக்கப்பட்ட மற்றும் ஆவணப்படுத்தப்பட்டவொரு முறைமை என்று பொருளாகும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.